Sl. No. :

20558805

# GTBA14

பதிவு எண்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## 2014

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் வினாத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும். தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET

SEAL

□

[Turn over

1. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்

தண்மை

(A) குளிர்ச்சி
(B) வெம்மை
(C) கடுமை
(D) மென்மை

2. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர்

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கவிமணி
(D) நாமக்கல் கவிஞர்

3. பொருத்துக :

| | நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|---|
| (a) | சிலப்பதிகாரம் | 1. | திருத்தக்கதேவர் |
| (b) | மணிமேகலை | 2. | நாதகுத்தனார் |
| (c) | சீவகசிந்தாமணி | 3. | இளங்கோவடிகள் |
| (d) | குண்டலகேசி | 4. | சீத்தலைச் சாத்தனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

4. பொருளறிந்து பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திங்கள் | 1. | நட்சத்திரம் |
| (b) | வேந்தர் | 2. | ஆகாயம் |
| (c) | வானம் | 3. | மாதம் |
| (d) | விண்மீன் | 4. | அரசர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

5. கீழ்வருவனவற்றுள் சரியான இணையைக் கண்டறிக.

(A) துடிப்பு – கோமகன்
(B) அனுமதி – ஜெயகாந்தன்
(C) ஆளுகை – டாக்டர் சி.என். அண்ணாதுரை
(D) சோணாசலம் – சுஜாதா

6. இவற்றில் எது அறிஞர் அண்ணா கூற்று?

(A) ''பாட்டாளி ஓய்வு பெறுவது சமூக நீதியில் ஒன்று''

(B) ''மெய்வைத்த செல்வமெங்கே ! மண்டலீகர்தம் மேடை எங்கே''

(C) ''உள்ளத்தே பொருள் இருக்க புறம்பே பொருள் தேடுதல்''

(D) ''மன்னருக்குத் தன் தேசமில்லாமல் இறப்பில்லை''

7. தவறாகப் பிரிக்கப்பட்டுள்ள சொல்லைத் தேர்க.

(A) இலக்கியம் – இலக்கு + இயம்

(B) செம்மொழி – செம்மை + மொழி

(C) தமிழ்மொழி – தமிழ் + மொழி

(D) வேரூன்றிய – வேரு + ஊன்றிய

8. ஆங்கிலச் சொற்களுக்கு <u>நேரான</u> தமிழ்ச் சொற்களை அறிக.

இந்தச் செஞ்சுரி டென்ஷன் நிறைந்தது.

(A) இந்த நூற்றாண்டு பரபரப்பானது

(B) இந்த ஆண்டு பதற்றம் நிறைந்தது

(C) இந்த நூற்றாண்டு மனக்கவலை அளிப்பது

(D) இந்த நூற்றாண்டு மன அழுத்தம் நிறைந்தது

9. பொருந்தா இணையைக் கண்டறிக.

(A) பாண்டியர் – கொற்கை

(B) சோழர் – காவிரிப்பூம்பட்டினம்

(C) பல்லவர் – விசாகப்பட்டினம்

(D) சேரர் – முசிறி

10. பிரித்தெழுதுக :- 'கரியன்'

சரியாகப் பிரித்த தொடரைக் கண்டுபிடி

(A) கரு + அன்
(B) கருமை + அன்
(C) கரிய +அன்
(D) கரி + அன்

11. பொருத்துக :

(a) திருக்கோவையார் — 1. சேக்கிழார்
(b) திருப்பாவை — 2. மாணிக்கவாசகர்
(c) கலிங்கத்துப்பரணி — 3. ஆண்டாள்
(d) பெரியபுராணம் — 4. செயங்கொண்டார்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

12. விடைத் தேர்க :

''பேசுந் தாய்மொழியின் மாட்டு அன்பில்லா
ஒருவன் தாயையும், நாட்டையும்
பழித்தவனாவான்'' – என்று கூறியவர் யார்?

(A) திரு.வி.க.
(B) மறைமலையடிகள்
(C) பரிதிமாற் கலைஞர்
(D) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

13. விடைத்தேர்க :

''புதுநெறிகண்ட புலவர்'' என்று பாரதியாரால் போற்றப்பட்ட சிறப்புக்குரியவர் எவர்?

(A) சேக்கிழார்
(B) தாயுமானவர்
(C) மாணிக்கவாசகர்
(D) இராமலிங்க அடிகளார்

14. 'இமயம் எங்கள் காலடியில்' என்ற கவிதைத் தொகுப்பு யாரால் எழுதப்பட்டது?

(A) சிற்பி பாலசுப்பிரமணியம்

(B) தாரா பாரதி

(C) ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

(D) சுரதா

15. இரண்டு உதடுகள் பொருந்துவதனால் பிறக்கும் எழுத்துகள்

(A) ய், ர்

(B) க், ங்

(C) ல், ள்

(D) ப், ம்

16. எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை, யாரைச் சாரும்?

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) நாமக்கல் கவிஞர்

(D) கவிமணி

17. கீழுள்ள பாரதிதாசன் நூல் பட்டியலில் பொருந்தாத நூல் எது?

(A) குடும்ப விளக்கு

(B) பாண்டியன் பரிசு

(C) தேன் மழை

(D) குறிஞ்சித் திட்டு

18. கீழ்க்காணும் தொடரில் வழூஉச் சொற்களற்ற தொடரைக் கண்டுபிடி

(A) வலதுபக்கச் சுவறில் எழுதாதே

(B) வலதுபக்கச் சுவரில் எழுதாதே

(C) வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே

(D) வலப்பக்கச் சுவரில் எழுதாதே

19. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என வழங்கப் பெறும் நூல் எது?

(A) மணிமேகலை

(B) சிலப்பதிகாரம்

(C) வளையாபதி

(D) குண்டலக்கேசி

20. திருக்குறள் பாயிர இயலில் அமைந்துள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(A) ஐந்து

(B) நான்கு

(C) இரண்டு

(D) மூன்று

21. சந்திப்பிழையில்லாத தொடரைக் கண்டறிக?

(A) கைதொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

(B) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

(C) கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்

(D) கைத்தொழில் ஒன்றைக் கற்றுகொள்

22. இனத்தில் சேராத ஒன்றைச் சுட்டுக

(A) அம்பி

(B) பஃறி

(C) திமில்

(D) புணரி

23. 'எந்தெந்த நாடுகளில் தமிழர்கள் குடியரசுத் தலைவர்களாகவும்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்?

(A) சிங்கப்பூர், மொரிசியசு

(B) இலங்கை, மலேசியா

(C) அமெரிக்கா, கனடா

(D) தென் அமெரிக்கா, வட அமெரிக்கா

24. பொருத்தமில்லாத எதிர்ச்சொல்லைக் கண்டுபிடி

(A) தேய்ந்து × வளர்ந்து

(B) குழப்பம் × தெளிவு

(C) நண்பர் × செறுநர்

(D) கரத்தல் × மறைத்தல்

25. விடைத்தேர்க :

'அகராதி' என்னும் சொல் முதன் முதலாக இடம் பெற்றுள்ள நூல் எது?

(A) சதுரகராதி

(B) திருமந்திரம்

(C) திருவருட்பா

(D) திருக்குறள்

26. கீழ்க்காணும் 'வல்லினம் மிகா இடம்' குறித்த இலக்கணக் கூற்றில் பிழையான கூற்று எது?

(A) வினைத்தொகையில் வல்லினம் மிகாது

(B) உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது

(C) இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது

(D) நான்காம் வேற்றுமை விரியில் வரும் வல்லினம் மிகாது

27. கலித்தொகையில் நெய்தற்கலியின் ஆசிரியர் யார்?

(A) பெருங்கடுங்கோ

(B) கபிலர்

(C) நல்லந்துவனார்

(D) நல்லுருத்திரன்

28. பொருத்துக.

| | ஊர் | | சிறப்புப்பெயர் |
|---|---|---|---|
| (a) | மதுரை | 1. | திருவடிசூலம் |
| (b) | திருநெல்வேலி | 2. | கடம்பவனம் |
| (c) | சிதம்பரம் | 3. | வேணுவனம் |
| (d) | திருவிடைச்சுரம் | 4. | தில்லைவனம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

29. 'கா'– எனும் சொல்லின் பொருள் பின்வருவனவற்றுள் எது?

(A) சோலை

(B) ஆறு

(C) மலை

(D) காடு

30. கம்பராமாயணத்தின் ஐந்தாவது காண்டம்

(A) ஆரண்ய காண்டம்

(B) சுந்தர காண்டம்

(C) கிட்கிந்தா காண்டம்

(D) யுத்த காண்டம்

31. இலக்கணக் குறிப்பறிதல்

"நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே"

கூற்று (A) : செய்யுளிசையளபெடை

காரணம் (R) : ஒரு சீரில் இயல்பாக உள்ள நெட்டெழுத்து அளபெடுத்து, அளபெடைக் குறியை நீக்கினால் செய்யுளில் சீர், தளை கெடும்

(A) (A) – சரி, ஆனால் (R) – தவறு

(B) (A) – மற்றும் (R) – இரண்டும் சரி, மேலும் (R) – என்பது (A) – விற்குச் சரியான விளக்கம்

(C) (A) – தவறு, ஆனால் (R) – சரி

(D) (A) – மற்றும் (R) – இரண்டும் தவறு

32. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.

'தமிழக அரசு சிறந்த கலைஞர்களைக் கௌரவிக்கிறது'

(A) செயப்பாட்டு வாக்கியம்

(B) தொடர் வாக்கியம்

(C) கலவை வாக்கியம்

(D) செய்வினை வாக்கியம்

33. விகுதிப் பெற்றுள்ள தொழிற்பெயரைக் கண்டறிக

(A) தொண்டு

(B) கூத்து

(C) நசை

(D) ஆட்டம்

34. கொடுக்கப்பட்டுள்ள செய்யுளில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிதல்

'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே'

(A) உம்மைத்தொகை, வினைத்தொகை

(B) முற்றும்மை, பண்புத்தொகை

(C) இழிவு சிறப்பும்மை, உயர்வு சிறப்பும்மை

(D) வினைத்தொகை, பண்புத்தொகை

35. பொருந்தா இணையைக் கண்டறிக

(A) கலை – வித்தை

(B) கழை – மூங்கில்

(C) களை – முகத்தின் ஒளி

(D) காளை – மேகம்

36. கீழ்க்காணும் சொற்களுள் 'யானை' என்னும் பொருள் குறிக்காத சொல்

(A) கரி

(B) களிறு

(C) வேழம்

(D) கேழல்

37. இலக்கணக் குறிப்பறிதல் :

செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது

<u>வயிற்றுக்கும்</u> ஈயப் படும்.

அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு.

(A) முற்றும்மை

(B) உயர்வு சிறப்பும்மை

(C) எண்ணும்மை

(D) இழிவு சிறப்பும்மை

38. கீழ்க்காண்பனவற்றுள் எந்த நூல் முடியரசன் கவிதை நூலில் இல்லாதது?

(A) பூங்கொடி

(B) இயேசு காவியம்

(C) காவியப்பாவை

(D) வீரகாவியம்

39. 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' என்னும் புகழ்மிக்க நகரம் எது?

(A) திருநள்ளாறு

(B) திருநெல்வேலி

(C) தஞ்சாவூர்

(D) மதுரை

40. ரூபாயத் – என்ற சொல்லின் பொருள்

(A) பணம்

(B) பாட்டு

(C) மூன்றடிச் செய்யுள்

(D) நான்கடிச் செய்யுள்

41. ‘கோதைவில் குரிசில் அன்னான்’

இப்பாடலடி யாரைக் குறிக்கிறது?

(A) சிவன்

(B) இராமன்

(C) அருச்சுனன்

(D) இலக்குவன்

42. பொருந்தாத இணையினைக் காண்க.

(A) யாதும் ஊரே யாவரும் கேளிர் – கணியன் பூங்குன்றன்

(B) கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது – நாமக்கல் கவிஞர்

(C) மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் – கவிமணி

(D) தேனொக்கும் செந்தமிழே நீ கனி – பாரதியார்

43. “தமிழ் செய்யுள் கலம்பகம்”

இது யார் தொகுப்பு?

(A) மறைமலை அடிகளார்

(B) திரு.வி.க.

(C) க.சு. பிள்ளை

(D) ஜி.யு. போப்

44. கீழ்க்காணும் நூல்களில் பாரதிதாசனால் எழுதப்படாதது எந்த நூல்?

(A) இசையமுது

(B) கண்ணகி புரட்சிக்காப்பியம்

(C) தமிழியக்கம்

(D) தமிழ்ப்பசி

45. திருநாவுக்கரசரைக் குறிப்பிடாத பெயர் எது?

(A) தருமசேனர்

(B) தாண்டகவேந்தர்

(C) தம்பிரான் தோழர்

(D) வாகீசர்

46. "உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி

அடல்உறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்"

என்னும் —————— வாக்கும் அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.

(A) சீத்தலைச்சாத்தனார்

(B) மாணிக்கவாசகர்

(C) கம்பர்

(D) திருமூலர்

47. ஒரு பாடலில் சொல் பிரிவுறாது நின்று பலபொருள் தருவது

(A) சிலேடை

(B) செம்மொழிச் சிலேடை

(C) பிரிமொழிச் சிலேடை

(D) பிறிதுமொழிதல்

48. 'தற்குற்றம் வருவது ஓரான் புனைமலர்ச் சார்பால் அன்றி

அற்குற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் ஐயன்'

– இதில் 'அல்கு' என்பதன் பொருள்

(A) மருள்

(B) இருள்

(C) உருள்

(D) திரள்

49. வாக்கிங் போகும் போது மொபைல் யூஸ் பண்ண வேண்டாம் – சரியாக மொழிபெயர்க்கப்பட்ட வாக்கியத்தைக் கண்டறிக.

(A) நடைபயிற்சி செய்யும் போது செல்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்

(B) நடைபயிற்சி போகும் போது அலைபேசியைப் பயன்படுத்த வேண்டாம்

(C) நடைபயிற்சி போகும் போது தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டாம்

(D) நடைபயிற்சியின் போது இணையதளம் பயன்படுத்த வேண்டாம்

50. பொருத்துக :

பொருத்தமான இடைநிலையைத் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (a) | வருவான் | 1. | இறந்தகால இடைநிலை |
| (b) | காணான் | 2. | நிகழ்கால இடைநிலை |
| (c) | பார்த்தான் | 3. | எதிர்கால இடைநிலை |
| (d) | நடக்கிறான் | 4. | எதிர்மறை இடைநிலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

51. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கஃஃசு | 1. | இன்னிசையளபெடை |
| (b) | உழாஅர் | 2. | ஒற்றளபெடை |
| (c) | உண்பதூஉம் | 3. | சொல்லிசையளபெடை |
| (d) | உரனசைஇ | 4. | செய்யுளிசையளபெடை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

52. எதிர்ச்சொல் :

'இடும்பை' என்பதற்குப் பொருத்தமான எதிர்ச்சொல்லைக் கண்டுபிடி.

(A) துன்பம்
(B) இன்பம்
(C) கோபம்
(D) பொறுமை

53. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்

வாழை, வாளை, வாலை

(A) மரம், மீன், இளம்பெண்
(B) விலங்கு, மரம், பூப்பருவம்
(C) செடி, விலங்கு, மரம்
(D) பூ, செடி, விலங்கு

54. பிழையற்ற தொடர் எது

(A) கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
(B) கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
(C) கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
(D) கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

55. சரியானவற்றை தெரிந்து எழுதுக :

(A) புதுமைப்பித்தன் – அக்கரை பச்சை

(B) முல்லை சக்தி – வெள்ளி இரவு

(C) டாக்டர் மு. வரதராசன் – கொலு பொம்மை

(D) ஜீவா - பொன்னகரம்

56. முதுகுடிப் பிறந்த மகளிரும் நிகரற்ற வீர வாழ்க்கையினராவர்.

– இவ்வாக்கியம் எவ்வகை வாக்கியத்தைச் சார்ந்தது?

(A) வியப்பு வாக்கியம்

(B) வினா வாக்கியம்

(C) செய்தி வாக்கியம்

(D) கட்டளை வாக்கியம்

57. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியான வாக்கியத்தைத் தேர்ந்து எழுதுக.

(A) தம் அன்பினில் கும்பிடுதல் கூடும் கடன்

(B) அன்பினில் கும்பிடுதல் தம் கடன் கூடும்

(C) கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன்

(D) கூடும் தம் கடன் கும்பிடுதல் அன்பினில்

58. ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே.....''

எனும் சொற்றொடர் இடம் பெறும் நூல்?

(A) அகநானூறு

(B) புறப்பொருள் வெண்பாமாலை

(C) நாலடியார்

(D) நற்றிணை

59. 'தமிழ் மொழித் தூய்மை' இயக்கம் - தோன்றிய நூற்றாண்டு

(A) 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்

(B) 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்

(C) 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்

(D) 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்

60. கீழுள்ள நூல் பட்டியலில் பொருந்தா நூல் எது?

(A) வேதியர் ஒழுக்கம்
(B) சதுரகராதி
(C) தொன்னூல் விளக்கம்
(D) தமிழியக்கம்

61. 'He is a Prince among the Tamil Poets' (தமிழ்க் கவிஞர்களின் இளவரசன்) என்று வீரமாமுனிவர் பாராட்டிய புலவர்

(A) இளங்கோவடிகள்
(B) கம்பர்
(C) பாரதியார்
(D) திருத்தக்க தேவர்

62. "திருவாசகம்" யாரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது?

(A) ரேணியஸ்
(B) ஜி.யு. போப்
(C) எல்லீசர்
(D) லாசரஸ்

63. இரகசிய வழி எனும் ஆங்கில நூலை தழுவி தமிழில் நாடக நூலினை இயற்றியவர் யார்?

(A) பம்மல் சம்பந்த முதலியார்
(B) சங்கரதாஸ் சுவாமிகள்
(C) சுந்தரம் பிள்ளை
(D) இலட்சுமண பிள்ளை

64. பொருத்துக :

| | நூல் | | ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|
| (a) | திரிகடுகம் | 1. | விளம்பிநாகனார் |
| (b) | சிறுபஞ்சமூலம் | 2. | கணிமேதாவியார் |
| (c) | ஏலாதி | 3. | நல்லாதனார் |
| (d) | நான்மணிக்கடிகை | 4. | காரியாசான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

65. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக:-

'ஆடும் மயிலின் அழகுதான் என்னே!

(A) வினா வாக்கியம்

(B) கட்டளை வாக்கியம்

(C) உணர்ச்சி வாக்கியம்

(D) செய்தி வாக்கியம்

66. இணையாக இல்லாததை எழுதுக :

(A) பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சி — செய்திப் படம்

(B) ஒரு நிகழ்வை மட்டும் விளக்குவது — விளக்கப் படம்

(C) கருத்துக்கணிப்பு செய்யப்படுவது — கருத்துப் படம்

(D) கல்வி கற்பிப்பதற்கென உருவானது — கல்விப் படம்

67. வாக்கிய வகையைக் கண்டெழுதுதல் :

குடும்ப விளக்கு பாரதிதாசனால் எழுதப்பட்டது

(A) செய்வினை வாக்கியம்

(B) கட்டளை வாக்கியம்

(C) பிறவினை வாக்கியம்

(D) செயப்பாட்டுவினை வாக்கியம்

68. 'திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாகும்'

– எவ்வகை வாக்கியம்

(A) செய்தி வாக்கியம்

(B) கட்டளை வாக்கியம்

(C) வினா வாக்கியம்

(D) வியப்பு வாக்கியம்

69. 'Pilgrims Progress' என்னும் நூலினைத் தழுவி எழுதிய தமிழ் நூல் எது?

(A) மனோன்மணியம்

(B) தேம்பாவணி

(C) சீறாப்புராணம்

(D) இரட்சணிய யாத்திரிகம்

70. "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" இந்நூலுக்குச் சொந்தமானவர்

(A) கா.சு. பிள்ளை

(B) ரா.பி. சேதுப்பிள்ளை

(C) தேவநேய பாவாணர்

(D) கால்டுவெல்

71. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

எனும் பாடலடிகள் யாருடையது?

(A) புரட்சிக்கவிஞர்

(B) தேசியக்கவி

(C) காந்தியக் கவிஞர்

(D) கவிமணி

72. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு"

இக்கூற்றுக்குரியவர் யார்?

(A) கம்பர்

(B) கணியன் பூங்குன்றனார்

(C) ஔவையார்

(D) இளங்கோவடிகள்

73. அகர வரிசைப்படி அமைந்துள்ளதைக் கண்டறிக

(A) எழிலி, எழில், எழால், எழல்

(B) எழில், எழல், எழால், எழிலி

(C) எழால், எழில், எழிலி, எழல்

(D) எழல், எழால், எழிலி, எழில்

74. 'TROLLY' - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க?

(A) படப்பிடிப்பு

(B) உருப்பெருக்கி

(C) நகர்த்தும் வண்டி

(D) எதிர்ச்சுருள்

75. பின்வருவனவற்றுள் வீரமாமுனிவர் எழுதாத நூல் எது?

(A) தேம்பாவணி

(B) கித்தேரி அம்மாள் அம்மானை

(C) செந்தமிழ் இலக்கணம்

(D) ஆசாரக் கோவை

76. 'துறவை மேல் நெறி' என்று உச்சத்தில் வைத்துப் படைக்கப்பட்டவை எவை?

(A) சங்க இலக்கியங்கள்

(B) அற இலக்கியங்கள்

(C) பக்தி இலக்கியங்கள்

(D) காப்பியங்கள்

77. சங்கம் மருவிய கால நூல்களைக் கீழ்க்கணக்கு எனக் கூறும் பாட்டியல் நூல் எது?

(A) சிதம்பரப் பாட்டியல்

(B) நவநீதப் பாட்டியல்

(C) பன்னிரு பாட்டியல்

(D) சுவாமிநாதப் பாட்டியல்

78. "ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்

தாக்கற்குப் பேருந் தகைத்து"

- எனும் குறளில் வள்ளுவர் எடுத்தாளும் உவமை எது?

(A) ஆட்டுக்கடா

(B) வேங்கை

(C) குதிரை

(D) நாய்

79. “உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்” என்றவர்

(A) இராமலிங்க அடிகளார்

(B) தாயுமானவர்

(C) திருநாவுக்கரசர்

(D) சுந்தரர்

80. பொருத்துதல் : பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல்

(a) இகல் 1. செல்வம்

(b) திரு 2. ஆட்டுக்கடா

(c) பொருதகர் 3. துன்பம்

(d) இடும்பை 4. பகை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

81. ‘பள்ளி வேலை நாட்களை நூற்றெண்பதிலிருந்து இரு நூறாக உயர்த்தியவர்’ யார்?

(A) காமராசர்

(B) அண்ணாதுரை

(C) எம்.ஜி. இராமச்சந்திரன்

(D) ராஜாஜி

82. சந்திப்பிழை இல்லாத தொடரைக் கண்டறிக?

(A) திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது

(B) திரைபடம் மக்களை தன்பால் ஈர்க்கவல்லது

(C) கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

(D) செய்திபடங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்

83. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?

(A) பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் மாணவர்கள் அங்கத்தினர்

(B) தேர்வு நேரத்தில் அந்நியர் யாரும் நுழையக் கூடாது

(C) அலுவலகத்தில் உத்தரவு பெற்று உள்ளே வர வேண்டும்

(D) அலுவலகத்தில் கையூட்டு வாங்கக் கூடாது

84. மரபுப் பிழையற்ற வாக்கியம் எது?

(A) மயில் கூவியது ; குயில் குழறியது

(B) குயில் கூவியது ; மயில் முழங்கியது

(C) குயில் கத்தியது; மயில் அலறியது

(D) குயில் கூவியது ; மயில் அகவியது

85. 'அயர்ந்தவன்' – இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

(A) அயர்க

(B) அயர்

(C) அயர்ந்து

(D) அயர்ந்த

86. பட்டியல் I ஐ பட்டியல் II இல் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | ஊண் | 1. | மகிழ்வு |
| (b) | ஊன் | 2. | சனி |
| (c) | கலி | 3. | உணவு |
| (d) | களி | 4. | இறைச்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

87. மரபுப்பிழையற்ற தொடரைக் கண்டுபிடி

(A) காட்டில் மயில் அகவும் குயில் பேசும்

(B) காட்டில் புலி உறுமும் சிங்கம் முழங்கும்

(C) காட்டில் யானை கத்தும் நரி ஊளையிடும்

(D) காட்டில் கூகை கூவும் ஆந்தை அலறும்

88. DUBBING - என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கீழ்க்காணும் விடைகளில் எது சரியானது?

(A) ஒளிச் சேர்க்கை

(B) ஒளி விலகல்

(C) ஒலிச் சேர்க்கை

(D) ஒலி மாற்றம்

89. 'உரைநடை எழுதுவது தனது தொழில்' என்ற வகையில் உழைத்தவர்

(A) மு. வரதராசனார்

(B) ரா. பி சேதுப்பிள்ளை

(C) திரு. வி. கலியாணசுந்தரனார்

(D) கண்ணதாசன்

90. இவற்றில் எது திருவள்ளுவருக்கு வழங்காத பெயர்?

(A) மாதானுபங்கி

(B) பெருநாவலர்

(C) தேவர்

(D) காளிங்கர்

91. கீழ்வருவனவற்றுள் பண்புத் தொகை அல்லாதன,

I. நெடுநீர்

II. உகுநீர்

III. செந்நீர்

IV. கண்ணீர்

(A) (I) மற்றும் (II) சரி

(B) (II) மற்றும் (IV) சரி

(C) (I), (II) மற்றும் (III) சரி

(D) (I) மற்றும் (III) சரி

92. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

மேற்கண்ட குறட்பாவில் இடம்பெறும் "ஆகுல" என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல்லைத் தேர்க.

(A) OVER LOOK

(B) OVER POWER

(C) OVATION

(D) OVIPARUS

93. பொருத்துக.

| | சொல் | | தளை |
|---|---|---|---|
| (a) | பாரி பாரி | 1. | இயற்சீர் வெண்டளை |
| (b) | பலர்புகழ் கபிலர் | 2. | நேரொன்றியத்தளை |
| (c) | தாமரைப்பூ குளத்தினிலே | 3. | நிரையொன்றாசிரியத்தளை |
| (d) | அகர முதல | 4. | கலித்தளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

94. "ஈன்ற ஒருத்தியையும் பிறந்த நாட்டையும் பேசும் மொழியையும் ஒருவன், 'தாய்', 'தாய்', 'தாய்' என்று போற்றுகிறான்" என்னும் கூற்று யாருடையது?

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) திரு.வி.க.

(D) கம்பன்

95. விடைத் தேர்க :

"சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது" என்று கூறிய சமத்துவக் காவலர் யார்?

(A) தந்தை பெரியார்

(B) டாக்டர். அம்பேத்கர்

(C) பேரறிஞர் அண்ணா

(D) காமராசர்

96. தமிழ்நாட்டில் பட்டாசு வெடிக்காத ஊர் எது?

(A) கூடங்குளம்

(B) கூரங்குளம்

(C) கூந்தன்குளம்

(D) வேடந்தாங்கல்

97. இந்தியா மிகப்பெரிய நாடு – எவ்வகை வாக்கியம்?

(A) தொடர்நிலை வாக்கியம்

(B) தனிநிலை வாக்கியம்

(C) கலவை வாக்கியம்

(D) கட்டளை வாக்கியம்

98. பொருத்துக.

(a) நடந்தான் 1. தொழிற்பெயர்

(b) நடந்த 2. வினையெச்சம்

(c) நடந்து 3. பெயரெச்சம்

(d) நடத்தல் 4. வினைமுற்று

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

99. "சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து

தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்

புலனென மொழிப புலன் உணர்ந்தோரே" என்று கூறியவர் யார்?

(A) நற்கவிராச நம்பி

(B) பவனந்தி முனிவர்

(C) ஐயனாரிதனார்

(D) தொல்காப்பியர்

100. பிரித்தெழுதுக.

பரித்தியாகம்

(A) பரித்து + யாகம்

(B) பரித்தி + யாகம்

(C) பரி + தியாகம்

(D) பரிதி + யாகம்